12.03.2026 MCOP No.18/2020

சாட்சி : PW 1 சுகுமார்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்த அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. எங்களுடைய அரசு போக்குவரத்து கழகத்தின் மேலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது நான் தான் அரசு பேருந்தின் ஓட்டுநர் என்றால் சரிதான். விபத்தின் போது நான் எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி சென்றேன் என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றேன். இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் எந்த வாகனம் என்றால் லாரி ஆகும். இந்த விபத்தில் நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் ஆமாம். லாரி பேருந்திற்கு முன்பக்கம் சென்றதா அல்லது பின்பக்கம் சென்றதா என்றால் எனக்கு முன்னால் இடது புறமாக சென்ற வண்டி ஆகும். நான் அந்த லாரியை கடந்து செல்லும் போது இந்த விபத்து நடந்ததா என்றால் இல்லை லாரி வலது புறமாக திரும்பும் போது நான் ஒலி அடித்ததால் இடது புறமாக திரும்பியதால் லாரியின் பின்புறம் அரசு பேருந்து மோதியது. இந்த விபத்திற்கு உண்மையான காரணம் நான் தான் பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் இந்த விபத்து ஏற்படுத்தியது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ரூ.45,153/- எங்கள் அரசு பேருந்தை சரிசெய்வதற்கு செலவு ஆனது என்று சொன்னால் சரிதான்.

2. அரசு பேருந்தால் ஏற்படும் விபத்திற்கு பழுது நீக்குவதற்கு தனியாக அரசாங்கம் மூலம் ஆட்களை நியமிப்பது வழக்கம் என்றால் சரிதான். அவருகளுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது என்றால் சரிதான். நான் ரூ.45,153/- வாகனம் பழுது நீக்கியதற்காக கொடுத்துள்ள பில் ஆனது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் நான் என்பதால் என்னுடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.